# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2023 கும்பம் (பிப்—29-2-92) விலை உருபா 1-50 (இதழ் எண்: 152)


# தமிழக அரசின் மூடநம்பிக்கை!

## இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் வளர்ச்சிக் காலமா? அல்லது புராண, இதிகாச காலமா?

## இந்தியாவில் அறிவியல் வளர வேண்டும் என்று மெப்புக்குக் கூறும் குடியரசுத் தலைவர் வெங்கட்டராமனும், தலைமை அமைச்சர் நரசிம்மராவுந்தாம் விடை சொல்ல வேண்டும்

கடந்த 10-2-92 தொடங்கி, தமிழகத்தில் உள்ள எல்லாத் தமிழ்ச் செய்தித்தாள்களிலும் தொடர்ந்து நான்கைந்து நாள்கள் முழுப் பக்கங்களில் வந்த விளம்பரம் இது.

### புண்ணிய நீராடப் புறப்பட்டு வாரீர்!

"வரலாற்றுச் சிறப்புமிக்கதோர் வைபவம் தமிழ் நாட்டில் நடைபெற இருக்கிறது.

மிகவும் சிறப்புக்குரிய புண்ணிய விழா நாளான 18-2-1992 அன்று மகாமகக் குளத்தில் பகல் பொழுதில் தீர்த்தவாரி நடைபெறும்.

புண்ணிய நதிகளான் கங்கை, யமுனை, நர்மதை, சரஸ்வதி, சிந்து, காவிரி, கோதாவரி, சரயு, மகா நதி ஆகிய ஒன்பது நதிகளும் ஒன்பது கன்னியர்களாக வடிவெடுத்து மகாமகத்தன்று மகாமகக் குளத்தில் நீராடி ஒரு முறை தோன்றி அருள் புரிவார்கள் என்பது ஐதீகம்."

"மேலும் புராணத்தின் படி, பிரம்மா உலகத்தில் உள்ள ஜீவன்கள் அனைத்தையும் அமிர்தம் கொண்ட மண் கலசத்தில் வைத்து பூஜை செய்யும் போது, பிரளய காலத்தில் கலசம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப் படுகிறது. அப்போது சிவபெரு-

Scanned with CamScanner

மான் வேடன் உருவத்தில் வந்து மண் கலசம் மீது அம்பு எய்தி உடைக்கிறார். ஜீவன்கள் உற்பத்தியாகி உலகம் தோன்றுகிறது. கலசத்தில் உள்ள அமிர்தம் நாலா புறமும் தெறித்து ஒரு பக்கம் குவிகிறது. அவ்வாறு குவியும் இடம்தான் கும்பகோணம் மகாமகக்குளம் ஆகும் என்பதும் ஐதீகம்.''

இதுவன்றிக் கீழ்வரும் இன்னொரு விளம்பரமும் அரைப்பக்கத்தாளில், எல்லாச் செய்தித் தாள்களிலும் ஏறத்தாழ அதே 10 2-92-இல் வெளிவந்துள்ளதையும் அன்பர்கள் இணைத்துப்பார்த்திடவேண்டும்.

அவ் விளம்பரத்தின் தலைப்பில் காஞ்சி மடத்தின் பார்ப்பன மூஞ்சிகள் மூன்றும்(நேற்று,இன்று, நாளை) கள்ளச் சிரிப்புடன் காட்சியளிக்கின்றன. அவற்றுக்கு மேல்,

''மனித சக்தியின் முயற்சிக்கு
தெய்வ சக்தியின் அருளாசி!''

என்னும் உரைகள் கொட்டை எழுத்துகளில் காணப்படுகின்றன. இவற்றின் கீழ்,

''வெறும் உயிரைக் காக்க உழைக்கும் எங்களுக்கு ஆன்மாவையே காக்க அவதரித்த காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் மற்றும் காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் தங்களின் வேத பூர்வ பாத மலர்களை மலர் மருத்துவமனையில் பதித்து பேரருள் தர சம்மதித்திருக்கிறார்கள்,''

—இவ் விளம்பரத்தை, சென்னையில் உள்ள மிகச் சிறந்த பார்ப்பன மருத்துவர்கள், தொழிலதிபர்கள் ஆகியோர் அவர்கள் ஆளுமையர்களாக (நிர்வாகிகளாக) இருந்து பணியாற்றும் மலர் மருத்துவமனைத் திறப்பு விழாவின் அழைப்பு அறிவிப்பாகக் கொடுத்துள்ளார்கள்.

—இவ் விரண்டு விளம்பரங்களும், இந் நாட்டில் உள்ள பார்ப்பனர்கள், அவர்கள் ஆட்சியிலிருந்தாலும் சரி, வேறு தொழில்கள் நடத்திக் கொண்டிருந்தாலும் சரி, அவர்களின் பார்ப்பனியக் கோட்பாடுகளைப் பரப்புவதிலும், அவற்றை நிலைநிறுத்திக் கொள்வதிலும் எவ்வளவு விழிப்பாக, கவனமாக, முன்னெச்சரிக்கையாக இருந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதற்குரிய தக்க சான்றுகளாகும்.

தமிழகத்தில் செயலலிதா ஆட்சிக்கு வந்த நாளிலிருந்தே பார்ப்பனியத்திற்குப் பலவகையான ஆக்கங்கள் செயல்படத் தொடங்கி விட்டன. வானொலி, தொலைக்காட்சியில் உள்ள பார்ப்பனர்கள் அனைவரும் தங்களுடைய சொந்த சொத்துகளைப் போலவே அவற்றைக் கையாளத் தொடங்கி விட்டனர்.

நாடகமா, உரையாடலா, ஆடலா, பாடலா, கருத்துரைகளா, திறனாய்வுகளா, உழவுச் செய்திகளா, விழாக்களா, வேடிக்கைகளா, விளையாட்டுகளா, விளம்பரங்களா—எதுவென்றாலும் அனைத்திலும் பார்ப்பனச் சேரித் தமிழ் வழக்கும், குடுமி, பூணூல், திருநீறு, நாமம் அணிந்த வெற்றுடம்பு ஆடவர்களும் மடிசார் மாமிகளும், பார்ப்பனக் குஞ்சு குளுவான்களுமே நிறைந்த காட்சிகளுந்தாம—தொலைக் காட்சியில் காட்டப்படுகின்றன, கதைகளா அவாள் கதைகள்தாம்! பாடல்களா தியாகராசர், இராமதாசர், பாபநாசன் சிவன் ஆகியவர்களுடையவைதாம்! ஆடல்களா பத்மா சுப்பிரமணியம் குழுமங்கள்தாம்; கூட்டங்கள்தாம்! இவ்வாறு பார்ப்பனியத் தனமான கலைகள், காட்சிகள்தாம் தமிழில் உள்ளன என்பது போன்ற கூத்தடிப்புகள்! ஒட்டுமொத்தமாகச் சொல்வதானால், பார்ப்பனர்கள்தாம் தமிழ்நாட்டில் உள்ளனர் என்பது போன்ற மயக்கத்தையே தொலைக்காட்சியிலும் வானொலியிலும் உருவாக்கி வருகின்றனர். இவற்றுள் நாட்டுப்புற—அஃதாவது அவர்கள் கருத்தில் சொல்வதானால் — தாழ்த்தப் பட்ட — தமிழிய — சூத்திரக் கலைகள் என்னும் தலைப்பில்—தாரை, தப்பட்டை, உருமி, மேளம், கரகாட்டம், காவடியாட்டம், பொய்க்குதிரை யாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம்,தெருக் கூத்து—ஆகியவற்றில் தான் தமிழ் மக்கள் சிற்றூர்ப் புற மக்கள் காட்டப்படுகின்றனர், பார்ப்பனர்கள் இத் தாழ்த்தப் பட்ட கலைகளில் தலை காட்டுவதேயில்லை. இவற்றில்தாம் தெம்மாங்கு, சிந்து முதலிய பழந்தமிழிசைகள் பயன் படுத்தப் படுகின்றன. இவை யெல்லாம் முன்பே ஒருவகையில் இருந்தன எனினும், செயலலிதா ஆட்சிக்கு வந்த பின்னர் நிலைகள் வானளவுக்கு மேலோங்கிக் கொடிக் கட்டிப் பறக்கின்றன.

இவை தவிர, செயலலிதாவின் போலித்தனமான, கோமாளித்தனமான, சிறுபிள்ளைத்தனமான அரசியல், பொய்யான வாக்குறுதிகள், ஏமாற்றுத்தனமான திட்டங்கள், (பணமே எங்குள்ளதென்று தெரியாத நிலையில் கனவு, கற்பனை நிலையில் கட்டப்படும் ஆண்டி மடங்கள் போலும் அழகு அழகுத் திட்டங்களாக மக்களைக் கவர்கின்ற வகையில் அறிவிக்கப் பெறுகின்றன!) விளம்பர, ஆடம்பர, ஆரவாரத்தனமான நடைமுறைகள், ஊர்வலங்கள், சுற்றுலாக்கள்,இலக்கம் இலக்கமாக, சிலவிடங்களில் கோடி கோடியாகப் பணத்தை விழுங்கும் பனைமரத்தின் அளவு உயர உயரமான செயலலிதாவின் வண்ண வண்ண வெட்டுருவங்கள் ஆயிரம் இயங்கிகள் புடை சூழ்ந்த பேரணிகள், ஊர்வலம் தம்மை வெகுவாக மெச்சிக் கொள்ள வேண்டும் என்னும் தந்நல நோக்கம் கொண்ட இலவய வேட்டி சேலை அன்பளிப்பு நிகழ்ச்சிகள், அவற்றுக்கென அடிதடி பட்டுக் கொள்ளும் ஏழை, நடுத்தர மக்கள் கூட்டங்கள்-இன்னோரன்ன காட்சிகள் நாடெங்கும் நகரமெங்கும் நாள் தவறாமல் வேளை தெரியாமல் நடந்து வருகின்றன.

இவை ஒரு புறம் நாட்டை அதிரடித்துக் கொண்டிருக்க எதிர்க் கட்சிகளைப் பொய் வழக்குகளாலும், தேசியப் பாதுகாவல், படுகொடுமை வன்முறைத் தடுப்புச் சட்டங்கள், காவலர் உறுப்புச் சிதைவு (சித்திரவதைகள்) சிறைக் கொடுமைகள் முதலியவற்றால் அடக்கி ஒடுக்குகின்ற தன்மைகள் ஒரு புறம் நாட்டை அச்சுறுத்தி வெருவச் செய்கின்ற நிகழ்ச்சிகள் —

இவற்றால் பார்ப்பனியம் தான்தோன்றித் தனமாக வளர்ச்சி பெற்றுத் தலைகால் புரியாமல் ஆடுகின்ற நிலை. சாராயக் கடை, ஆட்சியதிகாரக் கையூட்டுப் பெருக்கங்கள், திரைப் படங்களில் பச்சை அருவருப்புக் காட்சிகள் ஆகியவற்றிடையே இந்து மத மூட நம்பிக்கை வளர்ச்சிகளும் தமிழ் நாட்டைப் பாழ்படுத்திக் கொண்டு வளர்கின்றன.

இந்த அழிம்புத்தனமான ஆடம்பர ஆரவார நெருக்கடி நிலைகளுக் கிடையில்தான் கும்பகோணம் மகாமகம் பற்றிய கீழ்த்தகவான மூட நம்பிக்கை விளம்பரங்கள் அனைத்துச் செய்தித்தாள்களிலும் பக்கம் பக்கமாக வந்தன.

கடந்த காலங்களிலும் மகாமகங்கள் நடக்கத்தான் செய்தன. வழக்கமான பார்ப்பன விழாக்களைப் போல் அதுவும் ஒரு நடைமுறை விழாவாக வந்து போய்க் கொண்டிருந்தது. திருவண்ணாமலைத் தீவம் போல, திருப்பரங்குன்றத்தின் திருமுருகன் விழாப் போல, மதுரையில் மீனாட்சியம்மன் திருமண நிகழ்ச்சி போல — இதுவும் ஒரு இயல்பான நிகழ்ச்சியாக வந்து போய்க் கொண்டிருந்த ஒன்றைச் செயலலிதா, தம் திரைப்பட ஆடம்பர விளம்பர அரசியல் உத்தியாக மாற்றினார்.

புராண மூட நம்பிக்கை நிகழ்ச்சி 'வரலாற்று' நிகழ்ச்சியென்று மகுடம் சூட்டி விளம்பரம் செய்யப் பெறுகிறது.

அறிவியல் வளர்ச்சி மிக்கோங்கி, வான்வெளியிலேயே போய்க் குடியிருக்கின்ற அளவுக்கு முன்னேறியுள்ள நிலையில்,

புண்ணிய ஆறுகள் ஒன்பதும் பெண்களாக வடிவெடுத்து கும்பகோணம் மகாமகம் குளத்தில் வந்து நீராடுகின்றன என்றும், அந்த நாளில் அந்த நேரத்தில் வந்து நீராடுபவர்களுக்கு அவை — அந்தக் கன்னிப் பெண்கள் — அருள் புரிவார்கள் — என்றும் ஆட்சியாளர்களே மக்களிடையில், மக்கள் வரிப்பணத்தைச் செலவிட்டு விளம்பரம் செய்கிறார்கள் என்றால், இதற்கு எங்கே போய் முட்டிக் கொள்வது? எவரிடம் போய் ஞாயம் கேட்பது? ஏமாற்றுபவர்கள் ஆட்சியில்! இளித்த வாயர்கள் நாட்டில்! வேறெப்படித்தான் நிகழ்ச்சிகள் நடக்கும்?

இந்தப் புளுகுகளுக் கெல்லாம் ஓர் அளவே இல்லையா?

பிரம்மா உலகத்தில் உள்ள உயிரினங்கள் அனைத்தையும் ஒரு மண் கலயத்தில் வைத்துப் பூசை செய்தாராம். அப்போது சிவன் ஓர் அம்பு எய்து அக் கலயத்தை உடைத்தாராம். அப்பொழுது கலயத்தில் உள்ள அமிழ்தம் நான்கு புறங்களிலும் சிதறுகிறதாம். அஃது ஒரு புறத்தில் குவிகிறதாம். அந்த இடந்தான் கும்பகோணமாம். அந்தப் பொருள் தான் மகாமகம் குளமாம்.

இஃதென்ன ஏமாற்றுத் தனம்! மூட நம்பிக்கை! இஃது இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் வளர்ச்சிக் காலமா? அல்லது புராண, இதிகாச காலமா? இஃது எவ்வளவு வெளிப்படையான கயமைத்தனம்! ஓர் அரசே மக்களை இப்படி ஏமாற்றி அவர்களை மூடநம்பிக்கைக்கு உள்ளாக்கலாமா?

இனி, அடுத்த விளம்பரத்தைப் பாருங்கள்! பார்ப்பன மருத்துவர்கள் சிலர் கூடி, மூன்று காஞ்சிப் பச்சைப் பார்ப்பனர்களின் படங்களைப் போட்டு, இம் மருத்துவர்களின் முயற்சி 'மனித சக்தியின் முயற்சியாம்; அந்த காஞ்சி காமகோடி ஊசைப் பார்ப்பனர்கள் தெய்வ சக்தியின் அருளாசி தருகிறார்களாம். என்ன கொடுமை! நன்றாகப் படித்து மருத்துவப் பட்டம் பெற்ற மடயர்கள் இப்படி நெஞ்சாரப் பொய் கூறி மக்களைப் பட்டப் பகலில் ஏமாற்றுகிறார்கள்.

அந்த முட்டாள் மருத்துவர்கள் மக்களின் வெறும் உயிர்களைக் காக்க உழைக்கிறார்களாம். அவர்களுக்கு அந்த வேதத் தெய்வங்கள் தங்கள் பாத மலர்களை அவர்கள் கட்டியுள்ள மருத்துவமனையில் கொண்டு வந்து வைத்து அருளாசி வழங்குகிறார்களாம்! என்ன கயவாளித்தனம்!

நன்றாகப் படித்துப் பட்டம் பெற்ற இந்த மருத்துவர்களே, தங்கள் அறிவுத்திறனை, அந்த ஊசை, உளறுவாய்ப் பார்ப்பனன்களுக்கு அடகு வைத்தால், இவர்களிடம் மருத்துவம் பார்க்க வரும் அறியாமை மிக்க நோயாளிப் பொது மக்கள் என்ன செய்வார்கள்? அப் பார்ப்பன ஏமாற்றுக் காரர்களை இன்னும் மேலாகவன்றோ எண்ணுவார்கள்! நம்புவார்கள்!

இம்மாதிரி ஏமாற்றுகள் இவ்வறிவியல் காலத்திலேயே நடந்தால், பழங்காலங்களில் எவ்வெவ் வகையில் பொது மக்கள் ஏமாற்றப் பட்டிருக்கமாட்டார்கள்! எண்ணிப்பாருங்கள்!

'பார்ப்பான் நம் தெய்வம்' (பிராமண மம தெய்வதம்) என்னும் மூட நம்பிக்கையை — ஏமாற்றை — மக்களிடம் மேலும் மேலும் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதே அனைத்துப் பார்ப்பனரின் கொள்கையாகும் — கோட்பாடாகும் — ஆசையாகும்!

Scanned with CamScanner

இனி, இதுபோலும் எத்துகள், ஏமாற்றுகள், பார்ப்பனக் குறும்புகள் எல்லாம் செயலலிதா முதலமைச்சரான பின்னர்தாம் படிப்படியாக—நாளுக்கு நாள்—மிக மிக வளர்ந்து வருகின்றன என்பதை அனைவரும் நன்கு கவனிக்க வேண்டும்.

செயலலிதா, கச்சத்தீவு மீட்புத் தோல்விக் கிடையில், காவிரி நீர் மீட்புப் பின்வாங்கலுக் கிடையில், தம் வாயவிழ்த்துக் கொடுத்த பல்வேறு உறுதிகளையும் மறக்கடிக்கின்ற வகையில், மகா மகம் நிகழ்ச்சியை மிகவும் பெரிது படுத்தி, அரச விழாப் போல் கொண்டாடியும் அதில் தாம் போய் இருபத்தொரு வெள்ளிக் குடங்களின் நீரில் குளித்தும் பெரு விளம்பரமும் பெரிய திசை திருப்பமும் செய்து கொண்டார். இவர் மகாமகத்தை முன் வைத்து நடத்திய அரசியல் கூத்தாட்டத்தையும், பெற்றுக் கொண்ட திரைப்படப்பாணி விளம்பர வேடிக்கைகளையும், அவற்றுக்கு ஏற்பட்ட மக்கள் வரிப்பணத்தால் ஆன செலவுகளையும், இவர் கூத்தடிப்பால் நேர்ந்த இரு நூற்றுக்கும் மேற்பட்ட உயிரழிவுகளையும், எதிர்கால மகா மக நிகழ்ச்சிகள் அனைத்திலும் நினைவு கூர்கின்ற வண்ணம் நடத்திவிட்டார், இத்தனை உயிர்கள் இறந்திருக்கின்ற வேளையிலும் (எத்தனை ஆயிரம் பேர் செத்திருந்தாலும் செயலலிதாவின் விளம்பர வெறி அடங்காது. பாலியல் வெறியின் மறு வடிவம், அது!) மிகத் தந்தரமாகத் தம் பிறந்த நாளைக் கொண்டாட வில்லை என்னும் விளம்பர அறிவிப்பு (அவ்வகை அறிவிப்பும் விளம்பரத்திற்காகவே!) செய்தும், முட்டாள் அமைச்சர்கள் இருவரையும் மூடப் பெண்கள் ஐநூற்றுக்கு மேற்பட்டவர்களையும் தம் உருவத்தை அவர்கள் கைகளில் பச்சை குத்தச் செய்தும், வேறு சில அன்பளிப்பு உத்திகளைக் கையாண்டும் தம் பிறந்த நாள் செய்தியை இந்தியா முழுவதும் பரப்பி விட்டார்; நிகழ்ச்சியையும் அவர் கூறியதற்கு மாறாகவே மிக அமர்க்களமாகவே கொண்டாடச் செய்து விட்டார்.

எஃது எப்படியிருப்பினும் கண்ணுக்கு முன்னால், தெய்வீகம் என்னும் பெயரில் அறிவுக்கே பொருந்தாத வகையில் மூடநம்பிக்கைகள் பல நடைபெறுகின்றன. அவ் வகையில் இலக்கக் கணக்கான மக்கள் அதிகாரக்காரர்களால் படித்த மூட நம்பிக்கைப் பார்ப்பன வல்லாண்மைச் சாதியினரால் ஏமாற்றப் படுகின்றார்கள், சுரண்டப் படுகின்றார்கள்! இவற்றுக்கு முடிவுதான் என்ன?

இந்தியாவில் அறிவியல் வளர வேண்டும் என்று மெப்புக்கு முதலைக் கண்ணீர் விடும் பார்ப்பனக் குடியரசுத் தலைவர் வெங்கட்டராமனும், வஞ்சகமே நிறைந்த தலைமையமைச்சர் நரசிம்மராவுந் தாம் இதற்கு விடைசொல்ல வேண்டும். O

# மாமகக் குருதிக் குளியல்.!

## (பொதுச் செயலாளர் அறிக்கை.)

குடமூக்கைக் கும்பகோணம் ஆக்கியவர்கள், மாமகத் திருவிழாவை மகாமகம் என்றழைப்பார்கள். புனிதக் குளியலை குருதி(அரத்த)க் குளியல் ஆக்கி விட்டார்கள். மக்கள் உரிமைக்குப் போராடிச் சாவதைவிட, அறியாமை, மூடத்தனங்களால் செத்தழிவதே அதிகம் என்று கூறலாம்.

முப்பத்தைந்து இலக்கம் மக்கள் திரண்டனர் எனத் 'தினமணி' கூறுகிறது. இவர்கள் 'எந்தச் சிக்கலைத் தீர்த்திட, எந்தத் தேவையை நிறைவேற்றிட' இப்படித் திரண்டார்கள்; திரட்டப்பட்டார்கள்? இதை அறிவுள்ளவர்கள் வம்படித் தனமாகச் சிந்திக்க மறுத்தால் என்ன செய்வது?

'அறிவொளி இயக்கம்' நடத்தும் 'தமிழக அரசு; 'பகுத்தறிவு—திராவிடப் பாரம்பரியத்தின் பரிணாமம்' என்று கூறிக் கொண்டது. அதன் முதலமைச்சர், புனித நீராடுகிறார். அதற்காகச் செய்யப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடும், காவல்துறையின் 'கடமை உணர்வும்', கூட்ட நெரிசலில் மிதிபட்டு, மூச்சுத் திணறி மக்களைச் சாக விட்டிருப்பது கொடுமையிலும் கொடுமையாகும்.

தந்தை பெரியார், தன்னலத்தைப் பொது நலத்திற்காக விட்டுவிட்ட பெருந்தகையாளர். ஆனால் நீராடி "மேலுலகம் பெற விரும்பும்", தன்னலம் காரணமாகத் தமிழக மக்களின் நலவாழ்வுக்குப் பொறுப்பேற்ற முதலமைச்சர், பொது நலத்தைப் பலிகொடுத்து விட்டார்.

இலக்கம் உருபா இழப்பீடு, தமிழனை விடுவிக்காது. 'ஆறுதல்கள்' அரசியலாக்கப்பட்டுப், பதவி நாற்காலியை வலுப்படுத்திட உதவக்கூடும்! அரசியல் தலைவர்கள், மதச் சார்பு விழாக்களில் 'அரசுப் பதவிக் காலங்களில்' பங்கேற்கிற 'தனிமாந்த உரிமை' தடைசெய்யப்படுதல் வேண்டும்.

கூட்டங்களை முறைப்படுத்துவது மக்களைப் பாதுகாக்கவே, என்ற மக்கள் நலப் பார்வை அனைத்துத் தரப்பிலும், குறிப்பாகக், காவல்துறையினரிடம் ஏற்படுத்தத் தவறும் ஆட்சித் தலைமையினைக் கண்டிப்பது, மக்கள் நாயக உணர்வுடையவர் எல்லாருமே செய்யத் தகுந்த கடமையாகும்.

பறம்பை அறிவன், பொதுச் செயலர், உ.த.மு.க.

(10-ஆம்பக்கத் தொடர்ச்சி)

அணியமாகி விட்டதற்கு நாம் வியப்படையவில்லை. இதற்கு மேல் அமைச்சர் இந்திரகுமாரி. 'காந்தியைப் பார்க்கவில்லை; சான்சிராணியைப், 'பார்க்கவில்லை; அவர்களாகச் செயலலிதாவைப் பார்க்கிறேன்' என்கிறாரே! இந்தப் பேராயக் கட்சித் தலைவர்களுக்கும் இதனால் சூடு தட்டியிருக்குமா என்பது நமக்குப் புரியவில்லை. O

Scanned with CamScanner

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

## செய்திகள், கருத்துகள், செயற்பாடுகள்.

(துணைப் பொதுச்செயலர் பறம்பை அறிவன் அவர்களின் கருத்துகள் மடல்கள், அறிக்கைகள் முதலியன இப் பகுதியில் தொடர்ந்து வெளிவரும். தேவையான விடத்து முதல்வர் அறிக்கைகளும், மடல்களும் அவ்வப்பொழுது இடம் பெறலாம்.)

## கழக முதல்வர் அறிக்கை!

அமைப்பாளர்களே! ஆர்வலர்களே! அன்பர்களே! வணக்கம்!

### உ.த.மு.க. தொடக்கமும் கொள்கைகளும்!

'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' என்னும் உலகம் தழுவிய இவ் வியக்கம், பொதுவுடைமை இயக்கத்தைப் போல், உலகம் முழுவதும் பரவிவாழும் தமிழர்களை உணர்வால் ஒன்றிணைத்து, அவர்களை அனைத்து நிலைகளிலும் அவ்வந் நாடுகளுக்குத் தகுந்தபடி முன்னேற்ற வேண்டும் என்கிற ஓர் உயர்ந்த எண்ணத்துடன் 1981-இல் தொடங்கப் பெற்றது.

எனவே அதற்குரிய ஏழு பொதுக் கொள்கைகள் வகுத்து அளிக்கப் பெற்றுள்ளன. அவற்றைத் தீவிர சிந்தனைக்குப் பின் உருவாக்கியதுடன், அக் கொள்கைகளைச் செயற்படுத்தும் முதல் தொண்டனாக, முதல்வனாக, நானே பொறுப்பேற்றுக் கொண்டு இன்று வரை, எனக்கெனத் தனிநிலைப் பட்ட பல்வேறு வகையான அழுத்தங்கள், இடர்ப்பாடுகள், பொறுப்புகள் — ஆகியவற்றுக் கிடையிலும், இவ்வியக்கத்தை நடைமுறைப் படுத்தி வந்துள்ளேன்.

### இயக்கமும் இதழும்:

இவ் வியக்கத்தால், கடந்த பத்தாண்டுக் காலத்தில் பல்வேறு செயல்பாடுகள் நிகழ்ந்துள்ளன. அவற்றுள் இவ்வியக்கத்துக்கென '*தமிழ் நிலம்*' இதழைத் தொடங்கி, நடத்தி, அதன் வழி, பல் வகையான கருத்து விளக்கங்களையும், அரசியல், குமுகவியல் திறனாய்வுகளையும் தொடர்ந்து கொடுத்து வந்துள்ளது ஓர் அருஞ்செயலாகும். அவற்றுள் பல காலத்தால் அழிக்க முடியாதவை. புதிய மறுமலர்ச்சியையும் புத்தெழுச்சியையும் உருவாக்கியுள்ளவை.

### செயல் முரண்பாடுகள்:

இவ் வியக்கம் தொடங்கிய காலத்தில், இதனுடன் ஒன்றியிருந்து இதன் கொள்கைகளில், உரமாக நின்று, தீவிர வினைப்பாடுகளில் ஈடுபட்டவர்கள் சிலர் இன்று இதனின்றும் விலகி நிற்கிறார்கள் என்பது மறைக்க வேண்டிய ஒன்றன்று, குறைத்து மதிப்பிடக் கூடிய ஒன்றும் அன்று. உலகின் அனைத்து இயக்கங்களின் இயங்கியலே அது தான். இதற்குப் பல்வேறு காரணங்களைப் பலரும் கூறலாம். அவற்றுள் உண்மையும் இருக்கும்; உண்மையில்லாமையும் இருக்கும். (பொய் என்று கூற வேண்டிய தேவையில்லை.) '*எனைவகை யான் தேறியக் கண்ணும் வினைவகையான் வேறாகும் மாந்தர் பலர்*' — என்னும் திருக்குறளையும் ஓர்க. தொடக்கத்தில் ஒப்புக் கொள்ளப் பெற்ற கொள்கைகளில் சிலர் நெகிழ்ச்சி கொண்டதாலும், என்மேல் கொண்ட நம்பிக்கையிலும், அன்பிலும், சிலர் தளர்ச்சி கொண்டதாலும், கொள்கைகளின் இறுகலான பிடிநிலைகள் சிலர்க்கு ஒப்புதலின்மையாலும், கொள்கைச் செயற்பாடுகளால் சிலர்க்கு அச்சுறுத்தக் கூடிய தாக்கங்கள் ஏற்பட்டதாலும் அவ்வாறு அவர்கள் விலகி நின்றதாகக் கருத இடமுண்டு.

### உ.த.மு.க. கொள்கையும், தென்மொழிக் கொள்கையும்:

மற்றும், தமிழ்நிலத்திற்கும், உ.த.மு.க.விற்கும் முன்பே, எனக்கெனத் தென்மொழிக் கொள்கை என்பதாக ஒன்று உண்டு. உலகத் தமிழர்கள் எல்லாருக்கும் பொருத்தமான ஒரு கொள்கையை அமைக்குங்கால் கருதக் கூடிய இளகல் தன்மை, எனக்கென ஒரு கொள்கை நோக்கை, அமைக்கும் பொழுதும் அவ்வாறே இருக்கும் என்று கருத இயலாது.

எனக்கென ஒரு கொள்கை நம் நாட்டில் உள்ள அரசியல், குமுகவியல், சாதி, மத நிலைகளுக் கேற்ப உருவாக்கிக் கொண்டது. உ.த.மு.க. உலகந் தழுவிய இயக்க மாகலின் அக் கொள்கைகள், எல்லா நாடுகளிலும் உள்ள தமிழர்களுக்குப் பொதுவாக ஏற்கக் கூடிய வகையிலேயே அமைக்கப் பெற்றன.

இச்சிறிய அடிப்படை வேறுபாட்டினால், இங்குள்ள உ.த.மு.க. அன்பர்களுக்கும், முதல்வனாக

இருந்து செயல்படும் எனக்கும் பல செயல்முரண்பாடுகள் தோன்றலாயின. கடந்த காலத்தில் பாவாணர் தொடங்கிய உலகத் தமிழ்க் கழகத்திற்கு நான் பொதுச் செயலாளராக இருந்தபொழுதும் இவ்வகையான முரண்பாடுகள் தோன்றத்தான் செய்தன. ஆனால், அப்பொழுது பாவாணர், உ.த.க.விற்காக என் 'தென்மொழிக் கொள்கை'-யைத் தவிர்க்கும்படி கருத்துக் கூறினார். தென்மொழிக் கொள்கைக்காக, உ.த.க.வின் பொறுப்பைத் தவிர்ப்பேனே தவிர, இதற்காக அக்கொள்கையைத் தவிர்க்க மாட்டேன் "என்று அவரிடம் கூறி, உ.த.க.வின் பொதுச் செயலாளர் பொறுப்பைத் தவிர்த்து விட்டு வெளியே வந்து தென்மொழிக் கொள்கையில் உறைத்து நின்றேன்.

## தென்மொழிக் கொள்கை:

**'தென்மொழிக் கொள்கை'** என்பது, நாம் நம் தமிழ் மொழி நிலையிலும், இன நிலையிலும் எத்தனைதாம் சீர்திருத்தங்களும் தூய்மையான முன்னேற்றங்களும் செய்தாலும், அவை பார்ப்பனிய—வட நாட்டு வணிக ஆட்சியின் கீழ், பயனற்றவையாகப் போய்விடும் என்பதால், தமிழ்நாடு அதனின்று விடுபட்டுத் தனி இறையாண்மை பொருந்திய தனித் தமிழ் நாட்டு அரசாக விடுவிக்கப் பெறல் வேண்டும் என்பதே!

இத் தனிச் சிறப்பான கொள்கை உ.த.மு.க.வின் இப்பொழுதைய கொள்கை நிலைகளுக்குப் பொருந்தி வராது என்பது எல்லாரும் உணர்ந்த ஒன்றே!

இக் கொள்கை மயக்கம் எவ்வாறு நேர்கின்றதெனில், **தென்மொழியும் தமிழ்நிலமும்** நானே ஆசிரியராக இருந்து நடத்த வேண்டி இருப்பதால்தான் என்க.

## அதனால் ஏற்பட்ட தாக்கங்கள்:

இவ் விரண்டுங் கெட்டான் நிலையினால் கடந்த ஈராண்டுகளுக்கு முன், வேறு யாரோ இளைஞர்கள் சிலர் கூடி, ஓரிரு வெடிப்புச் செயல்களைச் செய்ய, அவற்றை உ.த.மு.க. அன்பர்கள் தாம் எவரேனும் செய்திருக்க வேண்டும் என்று கொண்டு, *தமிழ்நிலம்*, *தென்மொழி*, உறுப்பினர்கள், முகவர்கள், தொடர்புடையவர்கள் அனைவரையும், ஒருவரைக் கேட்டு ஒருவரை உசாவி அறிந்து கொண்டு, எல்லாரையும், பலவகையிலும் அச்சுறுத்தியும், அரட்டி மிரட்டியும், இவ்விரு இதழ்களின் விற்பனையையும் பகுதியாகக் குறைந்து போகும்படி கடுமையான நடவடிக்கைகளை எடுத்தனர், தமிழகக் காவல் துறையினரும், நடுவணரசு ஒற்றுத்துறையினரும்!

இதழ்ப் பரவுதல் குறையவே இயக்க நிலையும் சிறிது தொய்வடைந்தது. மற்றும் அன்பர்கள் பலர் தாம் உ.த.மு.க. தொடர்புடையவர்கள் என்று கூறவே அச்சப்பட்டனர்.

இந் நிலையில், உ.த.மு.க.வை மேலும் வரையறை செய்து, முறைப்படுத்தி, விரிவாக்கம் செய்து, புத்துயிர்ப்பூட்டிப் பரவலாக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன், நானும் துணைப்பொதுச் செயலர் திரு. **பறம்பை அறிவன்** அவர்களும், திரு. **அதியமான்** அவர்களும் கடந்த திசம்பர் இறுதியில் நடந்த நெல்லை மாவட்டச் சுற்றுச் செலவின் பொழுது, திருச்செந்தூரில் தீவிரமாகக் கலந்து ஆய்ந்து, ஒரு முடிவுக்கு வந்தோம்,

அதன் பின் எங்கள் முடிவை, மேலும், இவ் வியக்கத்தில் மிகு ஈடுபாடுடைய அன்புள்ளங்கள், திருவாளர்கள் சொல்லாய்வறிஞர். ப. அருளி, புலவர் **தி.மு.அரசமாணிக்கனார்**, தென்மொழி **ப.முருகவேள்**, **க.கண்ணன்**, **த.தமிழ்த் தென்றல்**, பாவலர் **கொ.செ.சின்னப்பனார்**, **நாவை.இளஞ்செழியன்** ஆகியோரிடம், கடந்த பிப்ரவரி முதற் கிழமையில் இரண்டு, மூன்று நாள்கள் கலந்து ஆய்வு செய்து, பற்பல மாறுதல்களைச் செய்து இருக்கிறோம். அந்த மாறுதல்களின் படி, கீழே உள்ள முடிவுகளை அறிவிக்கின்றேன்.

### அறிவிப்பு: 1.

இதுவரை, துணைப் பொதுச் செயலாளராகச் சிறந்த முறையில் பணியாற்றியும், ஓயாமல் ஒழியாமல் உ.த.மு.க. செயற்பாடுகளையே தம் முழு நேரச் சிந்தனையாகவும் இயக்கமாகவும் கொண்டும் விளங்கிய என் பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும், முழு நம்பிக்கைக்கும் உரிய, இனவியல் அறிஞர் **பறம்பை அறிவன்** அவர்களை இன்று முதல் கழகத்தின் **பொதுச் செயலாளராக** அமர்த்தம் செய்கிறேன்.

அவரே, இனி, கழகத்தின் அனைத்து அமர்த்தங்களுக்கும் முழுப் பொறுப்பும் முழு அதிகாரமும் உடையவராகத் தகுதிப் படுத்தப் பெற்றாலும், என்னுடைய முழுப் பட்டறிவையும், வினைத்திறனையும் கொண்டு, நானும் அவருமாக உடனடியாகச் சில முகாமையான அமர்த்தங்களையும் பொறுப்புகளையும் கீழே அறிவித்திருக்கிறோம்.

அனைத்தும் கழத்தின் எதிர்கால நலன்களுக்கும் ஆக்கத்திற்கும் உரிய மாற்றங்களே!

### அறிவிப்பு: 2.

கழகத் தொடக்கத்தினின்று, அதன் முதல் உறுப்பினராகவும், செயலுக்குரியவராகவும் பொருள்படும் வகையில் முதல்வராகப் பொறுப்பேற்று, அனைத்துச் செயற்பாடுகளுக்கும் அடிப்படையாகவிருந்த நான், இன்று முதற்கொண்டு, பல்வேறு காரணங்களுக்காவும், சில முடுக்கமான வினைகளுக்காகவும் அம் முதல்வர் பொறுப்பிலிருந்து வெளி-

Scanned with CamScanner

யேறி விடுகிறேன். என் பெயர் இனி நிறுவனர் என்னும் நிலையில் மட்டும் இருந்து வரும்.

என் இடத்திலிருந்து, தலைமைக்குழுவும், அக் குழுவின் பெயரடிப் படையில் பொதுச் செயலாளரும் இருந்து, கழகத்தின் அனைத்துக் கருத்து நிலைகள், செயல் நிலைகளுக்கும் காரணமாக இருந்து இயங்குவர்.

அறிவிப்பு: 3.

நான் முதல்வர் பொறுப்பில் இல்லாமல் இருப்பது அனைத்து நிலைகளுக்கும் சிறப்பானதாகவும், துடிப்புள்ள இளைஞர்களுக்கு வழிவிடுவதாகவும் இருக்கும். அத்துடன் புதிதாக அமைக்கப் பெற்ற தலைமைக்குழுவும், இணைச் செயலாண்மையும், துணைச் செயலாளர்களின் பொறுப்பும், அனைத்தும் சேர்ந்த ஆட்சிக் குழுவமைப்பும், கழகத்தைக் கட்டுக் கோப்பாகவும், சட்ட நெறி முறையடிப்படையாகவும் இட்டுச் செல்லப் பெருந்துணையாக இருக்கும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு.

இன்னொரு சிறப்பான முடிவு, கழகம், விரைவில் நேரடி அரசியலிலும் இறங்கி, எதிர்காலத்தில் அரசியல் கட்சியாகவும் தன்னைப் பதிவு செய்து கொண்டு, தேர்தலிலும் ஈடுபட்டு, அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்திலும் சிந்தனை கொண்டுள்ளது. இது, கழகம் பொதுமக்களிடையில் வேரூன்றுதலையும், அவர்களில் இரண்டறக் கலத்தலையும் படி நிலைவளர்ச்சியில் செய்து கொள்ளும் முடிவையும் விரைவையும் பொறுத்தது என்பது அனைவர்க்கும் தெரிந்ததே! எனவே அதைக் கழகத்தின் கருத்துத் தேர்வுக்கும் கால முடிவுக்குமே விட்டு விடலாம்.

இறுதியாக நான் அன்பர்களுக்கும் கழகப் பொறுப்பாளர்களுக்கும் அன்புடன் அறிவித்துக் கொள்வது என்னவெனில், உ.த.மு.க. ஆக்கமும் ஊக்கமும் பெற்று, ஆல் போல் விரிவடைந்து, அது தான் கொண்ட கொள்கைகளுக்காக என்றென்றும் உழைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதும், அவ்வாறு உழைக்கின்ற வகையில், இன்றும், இனி எதிர்காலத்திலும் பொறுப்பாளர்களாக வரவிருப்பவர்களுக்கு, இதில் உறுப்பினராகப் போகும் உணர்வுள்ளங்கள் ஒத்துழைப்பும் உறுதுணையும் தர வேண்டும் என்பதுமே ஆகும்!

மற்றபடி நான் உயிருடனிருந்து இயங்கும் வரை உணர்வாலும் கருத்தாலும் என்றும் உங்களுடன் ஒன்றியே இருப்பேன் என்பது உண்மையும் உறுதியும் ஆகும். —பெருஞ்சித்திரனார். O

## பொதுச் செயலாளர் அவர்களின் அமர்த்த அறிவிப்புகள்: 1. (3-1-92)

1. *இணைச் செயலாளர்—தலைமையகம்.*

O திரு.க.கண்ணன், கரடிப்பட்டி,
கஞ்சநாயக்கன்பட்டி (அ நி),
துவரங்குறிச்சி வழி. 621314
திருச்சி மாவட்டம்.

2. *தலைமைக்குழு—கருத்தாளர்.*

O திரு.சொல்லாய் வறிஞர் ப.அருளி.
'தனித் தமிழ்மனை,' காளிகோயில் தெரு,
தமிழூர் (திலாசுப் பேட்டை), புதுச்சேரி-9

3. *தலைமையகம்—துணைச் செயலர்கள்:*

O *சமநிலைக் குமுகாய முனைப்பியக்கம்:*
திரு.தி.மு.அரசமாணிக்கம்,
'மெய்யறிவில்லம்'
பாண்டியன் மாவாலை, 15, பாரிசாலை,
ஆசிரியர் குடியிருப்பு, ஈரோடை-11

O பொதுமைப் பொருளியல் செயலகம்:
திரு.தென்மொழி. ப.முருகவேள்,
சுண்ணும்பூர், பூஞ்சுத்தி 625110.
மேலூர், மதுரை மாவட்டம்

O அரசியல் ஆவணச் செயலகம்:
திரு.த.தமிழ்த் தென்றல்,
கா.தெக்கூர்,
நடுர், 614904-உரத்தநாடு (வட்)
தஞ்சை மாவட்டம்.

O கலை வளர்ச்சி இயக்கச் செயலகம்:
திரு. மா.அதியமான்
9/147, தமிழ் இல்லங்கள் வளாகம்
உள்மின் நிலையம் எதிரில், தாழையூற்று,
627457 சங்கர் நகர்(அஞ்),
நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்.

O அறிவியல் துறைச் செயலகம்:
திரு.மா.பூங்குன்றன்,
12,தொலைபேசி குடியிருப்பு,சி.ஐ.டி.நகர்,
சென்னை-35.

பிற அமர்த்தங்கள்—விளக்கங்கள் (தொடரும்)—

பறம்புக்குடி பறம்பை அறிவன்
3-1-92 பொதுச்செயலாளர், உ.த.மு.க.

தொடர்பு முகவரி:
பறம்பை அறிவன்,
பொதுச் செயலாளர்,
உ.த.மு.க.
8/42, தொடர்வண்டிச் சாலை,
பறம்புக்குடி-623 707.

# தாய்மொழி தமிழில் பாடாததேன்?

(*'சுப்புடு'* என்பவர் சிறந்த இசைத்திறனாய்வாளர் என்று அந்தத் துறையில் நன்கு மதிக்கப் பெறுபவர். உண்மையிலேயே அவருடைய திறனாய்வுக் கட்டுரைகள் தகுதி வாய்ந்தன. அவருக்கு இசைத்துறையில் உள்ள அறிவுக்கு ஒரு 'முனைவர்' (டாக்டர்) பட்டம் கொடுத்தாலும் தவறில்லை.

'தினமணிக் கதிரில்' அவர் எழுதும் கட்டுரைகளைப் படித்துச் சுவைக்காதவர்கள் இசையறிவும் இசையுணர்வும் இல்லாதவர்களாகவே இருத்தல் வேண்டும்.

அவர் பார்ப்பனர் ஆதலினால் இயல்பாகவே வடமொழியுணர்வினராகவே இருக்கிறார். ஆனால், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர் ஆகையால், கொஞ்சம் தமிழை மதிக்கின்ற தன்மையையும் அவரிடத்தில் பார்க்கலாம்.

இப்பொழுதுள்ள இசைப் பருவத்தில் எங்கு பார்ப்பினும் இசை விழாக்கள் நடைபெறுகின்றன. அவ்விழாக்களில் பாடுபவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்கள் ஆகையினால், அவர்கள் தெலுங்கு இசைகளையும், தியாகராயர் பத்திமைப் பாடல்களையுமே பாடுவதைக் கேட்கலாம்.

சுப்புடு அவர்கள், அத் தெலுங்குப் பாடல்களைக் கேட்டு மனம் வருந்தியவராய், அவர்கள் ஏன் தமிழில் பாடக்கூடாது, தமிழில் மிகச் சிறந்த இசைப் பாடல்கள் உள்ளனவே என்று ஒரு கட்டுரையை 29-12-91 தினமணிக் கதிரில் *'தாய்மொழியில் பாடலாமே'* என்னும் தலைப்பிட்டு எழுதியுள்ளார். அக் கட்டுரைப் பகுதிகளை அப்படியே (தூய தமிழ்ப் படுத்தாமல்) இங்கு தந்துள்ளோம். அவர் கூறும் உண்மைக்கருத்துகளுக்காக அவரை நாம் மிகவும் பாராட்டுகின்றோம். அவர் பெருமைக்கு இவை பெருமை சேர்க்கின்றன.

—**ஆசிரியர்**)

என் ஜாதகம் அப்படி.

ஏதாவது புழுதியைக் கிளப்பிக் கொண்டே இருக்க வேண்டும்.

எல்லாம் நல்ல நோக்கில்தான்.

ரசிகப் பெருமக்களே! உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள்.

மும்மூர்த்திகளின் கிருதிகளைக் கேட்கும்போது நீங்கள் எந்த அம்சத்தை ரசிக்கிறீர்கள்?

அவற்றின் அமைப்பையா, சாகித்தியத்தையா?

99 சதம் அவற்றின் இசை வடிவைத்தான். அதே சமயம் பாபநாசம் சிவனின் "நான் ஒரு விளையாட்டுப் பொம்மையா?" என்ற பாடலைக் கேட்கும்போது சாகித்தியம் புரிவதினால் பாவத்தோடு பாடப்பட்டால், புல்லரிக்கிறது அல்லவா!

உடனே பட்டுக்கோட்டையிலிருந்து பாணம் கிளம்பும்.

"அய்யோ மும்மூர்த்திகளை தூஷிக்கிறான் ஐயா, மகாபாவி" என்று.

எனக்குப் பல ஆண்டுகளுக்கு முன் திருவையாறு உற்சவத்தில் பங்கெடுத்துக் கொண்ட ராஜாஜி சொன்னது நினைவுக்கு வருகிறது.

அவர் சொன்னார்...

"தியாகராஜரின் தாய் மொழி தெலுங்கு. ஆகவே அவர் தெலுங்கில் எழுதினார். அவருடைய மேதா விலாசத்தை அந்த மொழியில் வெளிப்படுத்தினார்."

அப்படியேத்தான் தீட்சிதரும், புரந்தரதாஸரும், சியாமா சாஸ்திரியும்.

தியாகராஜரின் ஒரு கீர்த்தனையைக் கேளுங்கள். "நீ பொகட குண்டே"

தெலுங்கு தெரியாத ஒரு தமிழனுக்கு இந்தக் கீர்த்தனை தலையும் புரியாது, வாலும் புரியாது.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

**அமர்த்த அறிவிப்பு: 2. (4-1-92)**

தலைமையகம்—பொருளாளர்:

திரு. நா. வினைதீர்குன்றன்
592, இராசகோபால புரம் வீட்டுவாரியம்
புதுக்கோட்டை-622003.

## 'தமிழ் நிலம்'-பற்றிய பொறுப்பு விளக்கம்

உ.த.மு.க.வின் இயக்க இதழ் **'தமிழ்நிலம்,'** ஆயினும், இதுவரை உ.த.மு.கவின் முதல்வர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களின் பொறுப்பில் அவரை ஆசிரியராகக் கொண்டு இதழ் வெளி வந்தது போலவே, இனியும் அவ்வாறே வருவது தவிர்க்க முடியாததாக வுள்ளது.

சட்டப்படியும், உ.த.மு.க நெறிப்படியும் உ.த.மு.க. பொதுச் செயலாளர் பதவி வழி ஆசிரியராகப் பொறுப்பினை ஏற்பதற்கான நிலை முடிவாகும்வரை, பாவலரேறு அவர்களின் கருத்துப்படியே **'தமிழ்நிலம்'** வெளி வருகிறது. ஆயினும், பொதுச் செயலாளரின் உ.த.மு.க அமைப்புத் தொடர்பான செய்திகளை—விளக்கங்களைத் தொடர்ந்து **'தமிழ்நிலம்,** இதழில் அதன் சிறப்பாசிரியர்—கழக நிறுவனர்—**பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களால் வெளியிடப்பட்டு வரும்.

பறம்புக்குடி — பறம்பை அறிவன்
3-2-92. — பொதுச் செயலாளர் உ.த.மு.க.

ஏதோ LTTE சமாசாரம் என்று ஒதுங்கிக் கொள்வான்.

தெலுங்கில் 'ழ' கிடையாது. ஆகவே, புக'ழ' என்பது ''பொகடே'' என்று ஆகிவிட்டது.

அது மொழியின் கோளாறு.

மும்மூர்த்தியின் கிருதிகளைத் தீர்த்துக்கட்டி விட வேண்டுமென்று நான் வாதாடவில்லை.

அந்த மாதிரி மௌடீகத்தனம் எனக்குக் கிடையாது.

தமிழ் நாட்டில் தமிழ் கவனங்களுக்குப் பஞ்சமே கிடையாது.

முத்துத் தாண்டவர், அருணசலக் கவிராயர் கோடீஸ்வர ஐயர், சிவன், ஊத்துக்காடு வெங்கட சுப்பையர் ஆகியோர் ஆயிரக்கணக்கான கிருதிகளை அற்புதமாய் இயற்றித் தந்திருக்கிறார்கள். இந்தக் கிருதிகள் மும்மூர்த்திகளின் கிருதிகளுக்கு எந்த வகையிலும் சளைத்தவை அல்ல.

பாபநாசம் சிவனின் ''காணக்கண் கோடி வேண்டும்'' என்ற காம்போதிக் கிருதி, அட்சர லட்சம் பெறும்.

இந்தக் கிருதிகளைப் பாடுவதில் மற்றொரு நல்லது இருக்கிறது.

நிரவல் செய்யும்போது, அவை தமிழில் இருப்பதால், சேதப்படுத்துவதற்கு யோசிப்பார்கள். பாபநாசம் சிவனின் ''நின்னருள் இயம்ப லாகுமோ'' என்ற பந்துவராளி கிருதியில் ''இன்னல் கூட்டி இன்பம் ஊட்டி, இந்திர ஜால வித்தை காட்டி'' என்று வருகிறது.

இதற்கு எம்.எஸ். நிரவல் செய்து கேட்டிருக்கிறேன்.

இந்திர ஜாலம் செய்து விடுவார்.

எனக்கு மொழித் துவேஷம் கிடையாது.

ஏதோ காலதேச வர்த்தமானத்தினால், சரித்திரக் கோளாறுகளினால், நாயக்கர்கள் ஆண்ட காலத்தில், ராயர்கள் ஆண்ட காலத்தில் அன்னிய மொழிகள் அரசர்களை ஒட்டி வேரூன்றி விட்டன.

தமிழிலே கீர்த்தனைக்குப் பஞ்சம் என்று இருந்தால் நான் தமிழுக்காக வாதாடி இருக்க மாட்டேன். ஆண்டவர் அருளால் இப்போது கொஞ்ச காலமாகத் தமிழ்ப் பாட்டுகளை ''துக்கடா'' என்ற நிலைக்குத் தள்ளியதுபோய் அவை நிகழ்ச்சி நிரலில் கீர்த்தனை அந்தஸ்துக்கு உயர்ந்திருக்கின்றன.

சாகித்திய கர்த்தாக்கள் தங்கள் மேதாவிலாசத்தை ஒவ்வொரு கீர்த்தனைகளிலும் எழில் பொங்க வடித்திருக்கின்றார்கள்.

பொருள் புரிந்து பாடினால், அதன் அழகே வேறு. நான் மேற்கூறியது எல்லாம் நாட்டியக் கவனங்களுக்கும் பொருந்தும்.

முக்கால்வாசி நடனமணிகள் இதர மொழி வர்ணங்களுக்கும், பதங்களுக்கும் அபிநயம் பிடிக்கும்போது பொருள் தெரியாமல்தான் ஆடுகிறார்கள்.

இது மூக்காலும் சத்தியம்.

பொருள் புரிந்துவிட்டால் அபிநயம் தானே வரும்.

நான் மேற்கூறியவை எல்லாம் விருப்பு வெறுப்பு இன்றி ஆராய்ந்து சொல்வதுதான். நம்முடைய தாய்மொழிக்கு அதற்குரிய ஸ்தானத்தை வழங்க வேண்டும்.

கடைசியாக, தி.க.வும், தி.மு.க.வும் உதயமாவதற்கு எவ்வளவோ ஆண்டுகள் முன்னதாகவே ஆழ்வார்கள் அற்புதமான பாசுரங்கள் வடித்திருக்கிறார்கள்.

உள்ளத்தை உருக்குபவை.

ஒரு ''பச்சைமா மலைபோல் மேனிக்கு'' ஈடு கிடையாது.

இப்போதெல்லாம் கச்சேரிகளில் கடைசியில் இந்தி பஜன் என்று வதைக்கிறார்கள்.

இந்துஸ்தானி இசையில் நம்மவர்கள் எவ்வளவு தேர்ச்சி பெற்றாலும் இந்த வடக்கத்தியான்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

நமக்கு துக்கடா பாடுவதற்கு ஏராளமான இசை ஐஸ்வர்யம் இருக்கிறது. தேவாரம், திருப்புகழ், பாசுரங்கள், அந்தாதிகள் இன்னும் பலபல.

என்னுடைய தாழ்மையான சமர்ப்பணத்தைச் சீராக, நேராக, புரிந்துகொண்டு மேலும் மேலும் தாய்மொழியில் பாடுவார்கள் என்று எண்ணுகிறேன்.

-சுப்புடு.

நன்றி: '*தினமணிக்கதிர்*' 29-12-91

## தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு விலையேற்ற அறிவிப்பு!

அச்சீட்டுத் தாள்களும் மை முதலிய அச்சுப் பொருள்களும் கடுமையாக விலையேறியுள்ளதைக் கருத்தில் கொண்டு, **தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு** ஆகிய நம் இதழ்களின் விலைகளையும் உயர்த்த வேண்டுவது தவிர்க்க முடியாததாகி விட்டது.

| | தனியிதழ் | ஆண்டுக் கட்டணம். | அரை ஆண்டு | வாணாள் கட்டணம். |
|---|---|---|---|---|
| தென்மொழி | 3-00 | 36-00 | 18-00 | 500-00 |
| தமிழ்ச்சிட்டு | 1-50 | 18-00 | 10-00 | 250-00 |
| தமிழ்நிலம். | 1-50 | 36-00 | 18-00 | 500-00 |

எனவே, சென்ற மாதம் முதல் நம் இதழ்களின் விலைகள், உறுப்பினர் கட்டணங்கள் கீழ்வருமாறு உயர்த்தப் பெறுகின்றன.

Scanned with CamScanner

# "இவர்கள் அமைச்சர்கள்! இவர்கள் 'மக்கள்' -நாம் நம்ப வேண்டும்"!

(மக்கள் தொண்டன்)

செல்வி. செயலலிதா—நடிகை செயலலிதாவாக இருந்த போது 'இல்லாத தகுதி' இப்போது, முதல்வர் செயலலிதாவுக்கு வந்து விட்டதா...? என்ன! மூக்கில் விரலை வைக்கிறோம்! முதல்வர் செயலலிதாவே கூறியபடி, அவரைப் பழித்தவர்கள் எல்லாம் வானளாவப் புகழ்கின்றார்கள்! பதவி நாற்காலி அசைக்கப்படும் என்ற அச்சம், தமிழக அமைச்சர்களைப் பிடித்துக் கொள்ளும் போது, 'செயலலிதா''வை 'அர்ச்சனை' செய்கிறார்கள். அவர்கள் 'என்ன சொல்கிறோம்' என்பதை அறிந்து—தான் பேசுகிறார்களா என்பது விளங்கவில்லை!

இவர்கள் செல்வி செயலலிதாவை உண்மையிலேயே புகழ்கிறார்களா இல்லை மேலே மேலே உயரத்துக்குக் கொண்டு போய் இறுதியில் தொப்பென்று போடப் போகிறார்களா, நம்மால் இப்பொழுது கணிக்க இயலாது. காலந்தான் அதை உறுதி செய்து நமக்குத் தெரிவிக்க வேண்டும். இவர்கள் அமைச்சர்களா பதவி நமைச்சர்களா? இவர்களின் பாராட்டுகளில் உண்மையில்லையே! தன்மானம் இல்லையே! பகுத்தறிவு இல்லையே! அனைத்துக்கும் மேலாக, மாந்த உருவத்திற்கு இன்றியமையாமல் இருக்க வேண்டிய நாணம் (வெட்கம்) இல்லையே! ஊண், உடை, எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல;நாண் உடைமை மாந்தர் சிறப்பு!—என்பது திருக்குறள் மாந்தத் தன்மைக்கு வரையறுக்கும் இலக்கணம் ஆயிற்றே!

'செயலலிதா'வைப் 'புகழ்ந்து' பேசட்டும். அதனால் நமக்குக் காழ்ப்பில்லை. ஆனால், அப்புகழ்ச்சி காரணமாக, 'எளிய மக்களின்'உணர்வையும், சமயத் தலைவர்களின் நிலைப்பாட்டையும் பொருட்படுத்தாமல், இப்படிப் பேசுகிறார்களே என்பதுதான் வருத்தமெல்லாம்; மேலும் அவர் 'தமிழ்த் தாய்' என்பது போலும் 'உளறல்' மூலம், செயலலிதாவைப் பெருமைப் படுத்திட நினைப்பவர்கள், தமிழையே—தமிழினத்தையே, கொச்சைப் படுத்தி விடுகிறார்கள் என்பதே உண்மையாகும். 'முருகப் பெருமானின் வடிவம்' செயலலிதா என்பதை வாரியாரும், முருகனடியார்களும் முகஞ்சுழிக்காமல் ஏற்றுக் கொண்டு விடுவார்கள் போலும்!

இந்த 'அடியார்களும்,' 'இராமனை'க் கோயில் கட்டி, வழிபட்டு மசூதியை இடிக்க நினைக்கும் 'இந்து முன்னணிக்காரர்களும், 'சீதையாகச் செயலலிதாவையும் இராமனாக எம்.சி.ஆரையும்' ஏற்கனவே ஒப்புக் கொண்டிருப்பவர்கள் அல்லவா?

செயலலிதாவைப் 'பெண்' என்று இரங்க வேண்டாம், பேய் என்று விலக்கவும் வேண்டாம். அவரைத் 'தெய்வம்' என்றும் 'பராசக்தி' என்றும் 'புகழ்' கின்ற—('இகழ்'கின்ற) பழிப்புரைகளைப் பெருமையாக எண்ணிப் பூரிப்பால் வெடித்து விடாமல் இருப்பாராக!

'தமிழ்த்தாய்,' 'முருகப் பெருமானின் வடிவம்' என்று போற்றிய 'வீரப்ப மந்திரி'யின் தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறையை எடுத்து பறித்துக் கொண்ட முதல்வர் செயலலிதா 'இல்லாது சொன்ன' வீரப்பனைப் புரியவைக்கவே, இவ்வாறு செய்தார் என்று கருதலாமா?

...'செயலலிதாவின் கால்பட்டது என் வாழ் நாளில் நான் பெற்ற பேறு'—செல்வியைக் களங்கப் படுத்தும் வீரப்பனாரின் பேச்சுக்கு நாம் செயலலிதா பேரில் கண்டனம் தெரிவிப்போம்!

"இந்தியாவில் உள்ள முதல் அமைச்சர்களில் ஈடு இணையற்றவர்"...என்கிறார் வீரப்பன். சோதிபாசுவைப் பார் என்னும் இ.பொ.க.(மா) உறுப்பினர்கள், வீரப்பனை நொறுக்காமல் விட்டால் சரி!

இவ்வளவும் சொல்லி, இதற்கு மேலும் நாறிய சொற்களால் செயலலிதாவைப் பாராட்டிய வீரப்பனார், 'மாதர் குல திலகம்,' 'வீரப்பெண், என்று புகழ்ந்து தள்ளுகிறாரே, 'தீப்பொறி ஆறுமுகம்' பேச்சைப் பதிவு செய்த காவல்துறையிடம் கேட்டு அதனை வாங்கி ஒரு முறை கேட்டால் என்ன? அப்போது, 'மானமிகு வீரப்பனார்' 'ஈனமிகு' பேச்சுக்காக 'எதுவும் செய்து' கொள்ளாமல் இருந்தால் நல்லது!

ஆக இவர், தம்மை 'முட்டாள்' என்றும் ஒப்புக் கொண்ட உண்மைக்காக இவரை ஒரு முறை நாம் பாராட்டலாம்.

—(அடிப்படை: மாலைமுரசு, 25-1-92)

அமைச்சர் வீரப்பருக்குச் சளைத்தவரில்லை அமைச்சர் செங்கோட்டையன் என்று சொல்லுமளவு, 'திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சி,' என்று கூறியவர், அந்த வளர்ச்சி, குரங்கிலிருந்து மாந்தனாக, மாந்தனிலிருந்து குரங்காக 'என்று சுட்டிக் காட்டாமல் விட்டுள்ளது, நாளை—பதவி போனபின்—எப்படியும்' திருப்பிப் பிடித்துக் கொள்ளலாம்' என்பதற்காக இருக்குமோ, என்று எண்ணத் தோன்றுகிறது. செங்கோட்டையன், செயலலிதாவுக்குச் "செயின்ட் சார்சு கோட்டை போதாது;செங்கோட்டையிலும் அமர வேண்டும்" என்று. கூறியதன் உட்பொருளை விளங்கிக் கொள்ள முடியாமல் தவிக்கிறோம் நாம்!

செங்கோட்டையன், ஒவ்வொரு சொட்டு அரத்தத்தையும் செயலலிதாவுக்காக இழக்க

(தொடர்ச்சி 4-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# தமிழின நல ஊர்வலங்களில் முழக்க வேண்டிய முழக்கங்கள்!

புலவர். தமிழ்மாறன், அம்மன்புரம்.

ஆங்காங்கு நடைபெறும் தமிழின நல ஊர்வலங்களில் பலவாறான முழக்கங்கள் அவரவர் கருத்துகளுக்கும் கொள்கைகளுக்கும் ஏற்ப முழக்கப் பெறுகின்றன. கீழ்வரும் முழக்கங்கள் சிறந்தவையாகத் தேர்ந்தெடுக்கப் பெற்று இங்கு வெளியிடப் பெற்றுள்ளன. நம் இயக்க அன்பர்களும் பிற தமிழர் நல அமைப்புகளும் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். (தவிர்க்க இயலா நிலையில் ஓரிரு வடசொற்கள் சேர்க்கப் பெற்றுள்ளன)

1) முதலாளிகள் கொழுக்க இந்திய தேசியம்!
பாட்டாளிகள் வாழ தமிழ்த் தேசியம்!

2) மும்மொழி என்பது 'மோசடி'
இருமொழி என்பது ஏமாற்று!
ஒருமொழி என்பதே உண்மை!

3) தமிழனை 'இராட்சசன்' என்கிறது வேதம்!
தமிழ்நாட்டில் அதற்குக் கல்லூரியா?

4) தமிழனைத் 'தேவடியாள் மகன்' என்கிறது வேதம்!
தமிழன் பணத்தில் அதற்குக் கல்லூரியா?

5) வடக்கே மட்டும் ஒருமொழித் திட்டம்;
தெற்கே எதற்கு இருமொழித் திட்டம்!

6) இந்திக்காரன் வாழ இந்தி மட்டும் போதுமென்றால்,
தமிழன் வாழத் தமிழ்மட்டும் போதாதா?

7) தனிநாடு கேட்கும் பிரபாகரன் இந்தியாவிற்குப் பகையாளி!
தனிநாடு கேட்கும் அராபத்து மட்டும் விருந்தாளியா?

8) தன்னினம் காக்க வெள்ளையனைக் கொல்லும் மண்டேலாவிற்கு வரவேற்பு!
தன்னினம் மாய்க்க சிங்களரை நத்தும் வரதராசப் பெருமாளுக்குப் பாதுகாப்பா?

9) தன்னினத்தைக் கர்த்து நிற்பதால் மண்டேலாவிற்கு வரவேற்பு!
தன்னினத்தைக் காட்டிக் கொடுப்பதால் வரதராசனுக்கும் வரவேற்பு!

10) தமிழைக் காக்க 'நர்சரி' பள்ளிகளுக்குச் சட்டங்கள்!
தமிழை அழிக்க சமசுக்கிருத கல்லூரிக்குத் திட்டங்கள்!

11) தான் வங்காளி என்பதால் வங்காள நாடு கண்டு மகிழ்கிறார் சித்தார்த்த சங்கர் ரே!
தான் பாப்பாத்தி என்பதால் ஈழ நாடு கண்டு எரிகிறார் செயலலிதா?

12) வங்காள முசுலீமுக்குத் தனிநாடு—
வங்காள முதல்வருக்கு மன மகிழ்ச்சி!
தமிழீழ வர்க்குத் தனிநாடு—
—தமிழக முதல்வருக்கு மன உளைச்சல்!

13) பிரபாகரன் கேட்பது தனிநாடு
அராபத்து கேட்பது எந்த நாடு?

14) ஈழ 'அகதி'களை விரட்டுவது உண்மை என்றால்,
வரதராச பெருமாளை விரட்டுவது என்றைக்கு?

15) இந்து ஆலயப் பாதுகாப்பு வாரியமா?
இங்குள்ள அய்யர், அய்யங்கார் 'சம்ரட்சனை' சங்கமா?

16) அண்ணா தி.மு.க. என்றால்
—காஞ்சி அண்ணாத் துரையா?
—காஞ்சி சங்கராச்சாரியா? O

---

கருவி வலிவினால் மட்டுமே நிற்கும் ஓர் அரசைக் கருவி நடவடிக்கைகளினால் மட்டுமே அகற்ற முடியும்! —இலெனின் (1947)
(போல்சிவிக் கட்சித் தீர்மானம்.)

---

## 'தடா' சட்டத்தைப் பயன்படுத்தும் சூழலுக்கு உச்சநெறிமன்ற விளக்கம்!

உசுமான் பாய் தாவூத்பாய் மேமன் என்பவரின் வழக்கில் உச்சநெறி மன்றம் தீர்ப்பளிக்கையில் இத் 'தடா' சட்டத்தை அரசு எப்பொழுது பயன்படுத்த வேண்டும் என்று விளக்கியுள்ளது.

"இயல்பான நடைமுறையில் இருக்கின்ற சட்டங்கள் எல்லாம், நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் காப்பாற்றத் தவறித் தோல்வி அடைந்து விட்டால்,

—அவற்றை நடைமுறைப் படுத்த முடியாத அளவுக்கு அவை செயலற்றுப் போய் விட்டால்,

—காவலரும், காவல் துறையின் கையில் உள்ள சட்டமும், அவை காப்பற்றப்பட வேண்டிய ஒழுங்கும் அமைதியும் காப்பாற்றப் பட முடியாமல் வலுவிழந்து விட்டால்,

—அந்த நேரத்தில் தான் இந்தத் 'தடா' சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும்,—என்று உச்சநெறி மன்றம் கூறியுள்ளது. O

## "உலகத் தமிழின எழுச்சி நாள்" நடத்தப் பொதுச் செயலாளர் வேண்டுகோள்!

**உ.த.மு.க.வின் கொள்கைகளை உருவாக்கித் தந்தவர்,**
**தமிழினத்தின் விடுதலைப் போர்க்குரல்,**
**பாவலரேறு பெருஞ்சித்திரனார்!**
**அவர் பிறந்த நாள் 10-3-1933**

துரை.மாணிக்கம் என்னும் அரிமாப் பாவலர் பெருஞ்சித்திரனார், 'பாவலரேறு' பிறந்த நாளை உலகத் தமிழின எழுச்சி நாளாக, உ.த.மு.க சார்பில் கொண்டாட வேண்டுகிறேன்.

'பாவலரேறு பாட்டரங்கம்' சார்பில் உ.த.மு.க.வின், அரசியல், பொருளியல், குமுகியல், கலை இலக்கியக் கொள்கை, பண்பாடு, அறிவியல் பற்றிய படைப்புகளை எழுதச் செய்து ஆர்வலர்களை அரங்கேற்றுங்கள். பாவலரேறு படைப்புகள் மீதான ஆராய்ச்சி அரங்குகளை நடத்துங்கள்.

பாவலரேறு பாட்டரங்கம், பாவலரேறு படைப்பாய்வுக் கூட்டம், நடத்தப் பெருஞ்செலவு வேண்டாம். எளியமுறையில் அறிவெழுச்சி யூட்டும், அறைக் கூட்டங்களை, வளாக அரங்குகளை நடத்துக. துண்டறிக்கைகள் வெளியிட்டும்—பாவலரேறு படைப்புகளைப் பரப்பியும், எழுச்சி யூட்டுமாறு வேண்டுகிறேன்!

அருவருப்பான கலையுலகப் போக்கிற்கு எதிராக—உண்மை உழைப்பும், கலை, பண்பாடும் உயர்ந்து விளங்குமாறு செயல்படுக! அன்புடன்,

பறம்புக்குடி, பறம்பை அறிவன்
18-2-92 பொதுச் செயலாளர்.

நூல்-அஞ்சல்

பெறுநர்

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

## ஓ ஓ தமிழர்களே!

கடந்த 17-2-91-இல் ஈரோட்டில் நடந்த உ.த.மு.க. இரண்டாவது மாநாட்டில் ஆசிரியர் செய்த அரிய சிறப்புச் சொற்பொழிவு நூல்!

வெள்ளைத்தாள் பதிப்பு: 9-00
செய்தியச்சுத்தாள் பதிப்பு: 6-50
நூல் அஞ்சல் செலவு: 3-00.
தென்மொழி, சென்னை-5

**உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!**

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு: 69

பேச்சுரை என்பது, குற்றவாளிக்குத் தண்டனையும், குற்றமற்றவனுக்கு உரிமை மீட்பும் தருவதற்காகவே தவிர, சிக்கலைத் தள்ளிப் போடுவதற்காக அன்று.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 152

அனுப்புதல்:
**தமிழ்நிலம்**
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 8478293
உறுப்பினர்:
தனி இதழ் விலை உரு. 1-00
ஆண்டுக் கட்டணம் உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 25-00

தமிழர் ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய இதழ்கள்! தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு!

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம்,
5, அருணாசலத் தெரு, சென்னை-5.

Scanned with CamScanner